## 'மீனவர் சமூகம் எதிர்கொள்ளும் அபிவிருத்திசார் சவால்கள்: அம்பாறை மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட கரையோர கிராமங்களை மையப்படுத்திய ஆய்வு'

**Supervisor**
*Mr. M. Riswan,*
*Lecturer (Prob.),*
*Faculty of Arts and Culture*

**Researcher**
*Mr. MBM. Subiyaan,*
*Department of Social Sciences,*
*Faculty of Arts and Culture*

உலகில் பிரதானமானதும், பாரம்பரியமாக மேற்கொள்ளப்பட்டு வருவதுமான மீன்பிடித்தொழில் வருமானத்தை ஈட்டித்தரும் ஒன்றாகும். உலகில் வாழும் மக்களில் 60-70 சதவீதமானோரின் வாழ்வாதாரம், கரையோரத்திலும், கரையோர மூலகங்களிலும் நேரடியாகவும், மறைமுகமாகவும் தங்கியிருக்கின்றது. அதிலும் குறிப்பாக இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் வாழும் மிகக் கூடுதலான மக்கள் இதில் அதிகளவு தங்கியுள்ளனர். இத்தகைய மீன்பிடிக் கைத்தொழிலினை மேற்கொள்ளும் மீனவ சமூகம் பல்வேறுபட்ட சவால்களை எதிர்நோக்குகின்றது. ஏனைய சமூகத்தோடு ஒப்பிடும் போது இவர்களின் அபிவிருத்தி பின்தங்கியே காணப்படுகின்றது. எனவே இத்தகைய மீனவர் சமூகம் எதிர்கொள்ளும் அபிவிருத்திசார் சவால்களினை அடையாளம் கண்டு கொள்வதற்கு அம்பாறை மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட கரையோரக் கிராமங்களான கல்முனை முஸ்லிம் பிரிவு, கல்முனை தமிழ் பிரிவு, சாய்ந்தமருது, காரைதீவு, நிந்தவூர் போன்ற மீனவ கிராமங்களை மையப்படுத்தி இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மீனவர் சமூகம் எதிர்கொள்ளும் அபிவிருத்திசார் சவால்கள் அவர்களின் வாழ்வாதாரத்திலும், சமூக வாழ்க்கையிலும், பொருளாதாரத்திலும் எத்தகைய பங்கினை வகிக்கின்றது என்பதனைக் கண்டறிதலின் பொருட்டு ஆய்வின் போக்கு அமைந்துள்ளது. அத்துடன் கடல் நீர் மீன்பிடியினை மையமாகக் கொண்ட கரையோர கிராமங்களில் உள்ள மீனவ சமூகம் எதிர்கொள்ளும் அபிவிருத்திசார் சவால்களினை அடையாளம் கண்டு கொள்வதுடன் அவர்களின் அபிவிருத்திசார் சவாலுக்கும், வாழ்வாதார நிலைக்குமுள்ள தொடர்பினைக் கண்டறிவதையும் நோக்கமாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. முதலாம் நிலை மற்றும் இரண்டாம் நிலை தரவு சேகரிப்பு முறைகளைப் பயன்படுத்தி இவ்வாய்வுக்குத் தேவையான தரவுகள் பெறப்பட்டன. இரண்டாம் நிலைத் தரவுகள் கல்முனை மாவட்ட கடற்றொழில் காரியாலயத்தின் பதிவேடுகள் புள்ளிவிபரங்களும், முதலாம் நிலைத் தரவுகள் வினாக்கொத்து முறையைப் பயன்படுத்திப் பெறப்பட்டன. மீன்பிடிக் கைத்தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளோரிடையே எளிய எழுமாற்று மாதிரி எடுப்பின் மூலம் 100 பேரை தெரிவு செய்து அவர்களுக்கு வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டதுடன், நேர்காணல், அவதானம், இலக்கு குழு கலந்துரையாடல் போன்றவற்றில் கிடைக்கப்பெற்ற தகவல்களின் பின்னணியிலும் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. போதியவருமானமின்மை, மூலதனப்பிரச்சினை, குறைந்தளவிலான நவீன உபகரணப் பயன்பாடு, சந்தைப்படுத்தல் பிரச்சினை, வறுமை, தங்கிநிற்றல், கல்விசார் சவால்கள், சுகாதார ரீதியான சவால்கள், மீனவ குடியிருப்பு, உட்கட்டமைப்புசார் சவால்கள் போன்ற அபிவிருத்திசார் சவால்களை மீனவ சமூகம் அபிவிருத்தி சார் நிலையில் எதிர்கொள்கின்றமை ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

***Key words:*** *அபிவிருத்திசார், தங்கிநிற்றல், வறுமை, உட்கட்டமைப்பு*